**தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது இவ்விடயம் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது,மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னையை ஆண்டுடன் இணங்குவதாகுகவும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றின் பிரகாரம் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 1,383,024,529 ஆகவும் திறைசேரியின் அச்சுப்பதிப்பின்படி ரூபா 1,378,575,634 ஆகவும் காட்டப்பட்டிருந்த மையால் ரூபா 4,448,895 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | தொடர்ந்து வரும் காலங்களில் இவ் வேறுபாடுகள் தவிர்க்கப்படும். | திறைசேரிப் புத்தகத்துடன் இணங்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | நிதிச்செயலாற்றுகைக் கூற்றின் பிரகாரம் மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும் ரூபா 22,280,648 ஆகவும் திறைசேரியின் அச்சுப்பதிப்பின்படி ரூபா 22,537,817 ஆகவும் காணப்படுவதனால் வேறுபாடு ரூபா 257,169 அவதானிக்கப்பட்டது. | 2024 இல் இவ் வேறுபாடு நிவர்த்தி செய்யப்படும். | - மேற்படி - |
| (ii) | நிதிச்செயலாற்றுகைக் கூற்றின் பிரகாரம் மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு ரூபா 6,563,160 ஆகவும் திறைசேரியின் அச்சுப்பதிப்பின்படி ரூபா 6,163,840 ஆகவும் காணப்படுகின்றமையால் வேறுபாடு ரூபா 399,320 அவதானிக்கப்பட்டது. | Zip file செய்முறை யின் போது ஏற்பட்ட தொழில்நுட்ப குறைபாட்டினால் இவ் வேறுபாடு காணப்படுகின்றது. | - மேற்படி - |

**(ஆ) கட்டுநிதி மீதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக தேசிய முதியோர் செயலகத்தினால் 2023 திசெம்பர் 29 அன்று ரூபா 8,000,000 வைப்புச் செய்யப்பட்டிருந்த கட்டு நிதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காசும் காசுக்குச் சமனானவையுமாகக் காட்டப்பட்டிருக்காது முற்றாக விடுபட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு கணக்கு நடவடிக்கையை முடிவுறுத்தும் போது உள்ளடக்கப்பட வில்லை. | பயன்படுத்தப்படாத வைப்பு மீதிகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**2. நிதிமீளாய்வு**

**2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு**

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
| --- | --- | --- | --- |
| (அ) | 2020/2021 காலப்பகுதிகளில் கொவிட் விசேட கொடுப்பனவுக்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட நிதியில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிராத மீதித் தொகை ரூபா 579,500 திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்யப்பட்டிருக்காது புதுக்குடியிருப்பு சமுதாய அடிப்படை வங்கியில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்காத நிதியை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துக்கு மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 03 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளால் 2014 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதிகளில் 31 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் கூட்டுமொத்தம் ரூபா 1,421,364 தொகை அறவிடப்படாமல் நிலுவையாக காணப்பட்டிருந்தது. | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஊடாக கடனை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாகவுள்ள கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | மூன்று சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளில் காணப்பட்ட 05 வகையான 6,172 பயனாளிகளின் கூட்டுமொத்தம் ரூபா 26,299,722 செயற்பாடற்ற வங்கிக் கணக்கு மீதிகள் தொடர்பில் நாளது வரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான கணக்குகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகின்றன. | சமுர்த்திப் பயனாளிகளின் வங்கிக் கணக்கு செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.2 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்காக மாவட்டச் செயலகத்தினால் 02 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த நெல் கொள்வனவுக்கான முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 20,729,785 இல் கூட்டுமொத்தம் ரூபா 14,259,125 அல்லது 69 சதவீதமானது நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்து தற்போது பனங்காமம்பற்று ப.நோ.கூ.சங்க மீதியானது 1,909,125 ஆகவும் விசுவமடு ப.நோ.கூ.சங்க மீதியானது 12,350,000 ஆகவும் காணப்படுகின்றது | நிலுவையாகவுள்ள முற்பணங்கள் மீளப் பெறப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு என்பவற்றால் பல்வேறு கட்டங்களாக 98 பயனாளிகளுக்கு வழங்கப் பட்ட வீட்டுத்திட்டத்திற்கான கொடுப்பனவுகள் ரூபா 13,405,280 உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்காது புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், உடையார்கட்டு சமுர்த்தி வங்கிக் கணக்குகளில் 01 தொடக்கம் 04 ஆண்டுகளாக குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது நாளதுவரை தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | உரிய அதிகாரிகளின் அனுமதி கிடைத்ததும் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சமுர்த்தி வங்கிக் கணக்ககளிலுள்ள அத்தகைய நிதியானது குறித்த நோக்கத்துக்கு பயன்படுத்தப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சமுர்த்தி வாழ்வாதார உதவிக் கொடுப்பனவு தொடர்பான பயனாளிகளின் கணக்குகளை தெரிவுச் செவ்வை அடிப்படையில் கணக்காய்வுக்குட்படுத்திய போது 135 பயனாளிகளின் கணக்கு மீதிகள் ரூபா 32,106 தொடக்கம் ரூபா 175,749 எனும் வீச்செல்லையில் கூட்டுமொத்தம் ரூபா 8,443,715 உதவுதொகைகள் வாழ்வாதார மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காது பயனாளிகளின் சமுர்த்தி வங்கிக் கணக்குகளில் தேங்கி காணப்பட்டன. | மேற்படி பயனாளிகளின் விபரங்கள் பெறப்பட்டு கள உத்தியோகத்தர்கள் ஊடாக பயனாளிகள் இனம்காணப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வாழ்வாதாரத்துக்கான கொடுப்பனவுகள் குறித்த நோக்கத்துக்கு உபயோகிக்கப் பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Out come) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டு துணுக்காய் பிரதேச செயலகத்தின் செயற்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டிற்கமைவாக அறவிடப்பட்டிருக்க வேண்டிய 19 அரச காணிகளுக்குரிய குத்தகைக் கட்டணம் கூட்டு மொத்தம் ரூபா 3,268,790 கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிகளிலிருந்து அரச காணிகளை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் பல்வேறுபட்ட தரப்பினர்களிடமருந்து அக் காணிகளை உபயோகித்து வந்தமைக்கான குத்தகை வருமானத்தினை இழந்துள்ளது. | சிலர் கட்டணம் செலுத்தியுள்ளனர். மேலும் சிலருக்கு கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதி தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலுவையிலுள்ள குத்தகைக் கட்டணங்கள் அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | துணுக்காய் பிரதேச செயலாளரினால் பயனாளியொருவருக்கு தற்காலிக குத்தகையடிப்படையில் 2014 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த 29 ஏக்கர் அரச காணிக்குரிய குத்தகைக் கட்டணம் கூட்டு மொத்தம் ரூபா 1,480,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றதும் உரிய வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னறிவித்தலின்றி தொடர்ந்தும் கடமைக்கு சமுகமளிக்காதிருந்த 04 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய அலுவலர் ஒருவருக்கும் அவர்கள் கடமைக்கு சமுகமளிக்காதிருந்த காலப்பகுதிகளிற்கான வேதனாதிகள் கூட்டுமொத்தம் ரூபா 712,675 மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | பிரதேச செயலாளர் ஊடாக பணத்தினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | இத்தகை வேதனாதிகள் மீள அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் சமூக சேவை கிளையினால் வழங்கப்பட்டு வந்த அங்கவீனமுற்றவர்களுக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோய் கொடுப்பனவு, 70 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 100 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெற்று வந்த 154 பயனாளிகளுக்கு கூட்டுமொத்தம் ரூபா 2,788,300 கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கவில்லை | நிதியினைப் பெற்று கொடுப்பனவு செய்வதற்காக தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகி ன்றன. | உரிய காலத்தில் கட்டுநிதி கோரப்பட்டு பயனாளிக்குரிய கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளும் பொருட்டு மாவட்டச் செயலகத்தினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்த கொள்வதற்காகச் செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 06 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைக்கப்பட்டி ருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் இனங்காணப்பட்டு வருடாந்தம் அவற்றின் செயன்முன்னேற்றம் அளவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்குரிய சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திலுள்ள பல்வேறுபட்ட சேவை வழங்கும் நிலையங்கள் மற்றும் அலகுகளினை பொதுமக்கள் இலகுவில் அறிந்து கொண்டு அத்தகைய சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பிரதான நுழைவாயில் / பொதுமக்கள் மாவட்ட செயலகத்திற்கு சேவை நாடி உள் நுழையும் முகப்பில் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய அலுவலக தள அமைப்பு வரைபடம் முறையாக அமைக்கப்பட்டிருக்காமையால் சேவை பெறுநர்கள் குறித்த சேவை நிலையங்களை அடையாளம் காணுதலுக்காக பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. | விரைவில் அலுவலக தளவரைபடம் அலுவலக நுழைவாயிலில் பொருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அலுவலக தள அமைப்பு வரைபடம் காட்சிப் படுத்தப்படுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |

## 6. மனித வள முகாமைத்துவம்.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகத்தின் பொறியியலாளர் பதவி மற்றும் 03 பிரதேச செயலகங்களில் 03 உதவி பிரதேச செயலாளர், 02 கணக்காளர் மற்றும் 05 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்கான ஆளணி வெற்றிடங்கள் கடந்த 01 தொடக்கம் 10 ஆண்டுகளாக நிரப்பப்பட்டிருக்கவில்லை. | நியமனங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். | பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் |
| (ஆ) | தொழில் நுட்ப உதவியாளர் அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அத்தகைய 06 அலுவலர்கள் கடந்த 05 தொடக்கம் 09 ஆண்டுகளாக குறித்தவொரு சேவை நிலையத்தில் மாத்திரம் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் இவ் இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தும் அது செயற்படுத்தப்பட்டிருக்காது கைவிடப்பட்டிருந்தது. | தொழிநுட்ப உதவியாளர் தொடர்பான இடமாற்றம் தொடர்பான மேலதிக நடவடிக்கைக்கான அனுமதிக்காக அமைச்சுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் இடமாற்றம் மேற்கொள்ளப்படும். | இடமாற்றக் கொள்கைக் கமைவாக வருடாந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் 2023 யூலை 19 ஆம் திகதி தொடக்கம் நாளதுவரை கணக்காளராகக் பதிற் கடமையாற்றும் மாவட்டச் செயலகத்தின் கணக்காளருக்கு பதிற்கடமையாற்றுவதற்கு அரச சேவை ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி நாளதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனுமதி பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | வெலிஓயா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவை தரம் I ஐச் சேர்ந்த அலுவலரொருவர் கடந்த 10 ஆண்டுகளாக இடமாற்றப்பட்டிருக்காது ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தார். | இடமாற்றத்திற்கான அனுமதிக்காக அனுப்பப்பட்ட போதும் அமைச்சினால் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | பிரதேச செயலாளர்களுக்கான இடமாற்றக் கொள்கைக் கமைவாக வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |